# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 57/ந/2017

ஆணை எண். 217/2017

நாள் : 29/08/2017

திரு எம். முஹம்மது ஆரிஃப்,
விருதுநகர். – முறையீட்டு மனுதாரர்

திரு சி. கருப்பசாமி,
வருவாய் உதவியாளர்,
விருதுநகர் நகராட்சி,
விருதுநகர். – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம் மற்றும் நகராட்சி, 2–வது தெரு–தெற்கு, 48/3 பர்மா காலனி முகவரியில் வசிக்கும் திரு M. முஹம்மது ஆரிஃப் அவர்களின் 13.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 20.03.2017 அன்று பெறப்பட்டு, 57/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரது மனு மற்றும் கூடுதல் விளக்கம், எதிர்மனுதாரர் திரு C.கருப்பசாமி, நகராட்சி ஆணையர் ஆகியோரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விருதுநகர் மாவட்டம் மற்றும் நகராட்சி, 2–வது தெரு–தெற்கு, 48/3 பர்மா காலனி முகவரியில் வசிக்கும் திரு M. முஹம்மது ஆரிஃப் என்பவர் விருதுநகர் நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணிபுரியும் திரு C.கருப்பசாமி மற்றும் சொத்துவரி இருக்கை இளநிலை உதவியாளர் திரு B. குலசேகரப்பாண்டியன் ஆகியோர் மீது கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(i) விருதுநகர் அல்லித்தெருவில் தனக்குப் பாத்தியப்பட்ட 17/7 மற்றும் 17/8 எண்ணிட்ட வீட்டிற்கான சொத்துவரி விதிப்பு எண்களுக்கு (10298 (ம) 10299) பெயர் மாற்றம் செய்யக்கோரும் தனது கோரிக்கையினை காலம் தாழ்த்துவது ;

(2) வருவாய் உதவியாளர் திரு C. கருப்பசாமி 2016—செப்டம்பர் திங்களில் மனுதாரரின் வீட்டிற்கு வந்து சகோதரர் சகோதரியிடம் ரூ.2.000/— வழங்கக் கோரியது ;

(3) விருதுநகர் நகராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு B. குலசேகரப்பாண்டியன் சொத்துவரி பெயர்மாற்றம் குறித்த விண்ணப்பத்தின் மீது தீர்வு காணப்பட்டது என மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு அம்மா அழைப்பு மையத்திற்கு தவறான தகவல் வழங்கியது.

2. முறையீட்டு மனுதாரரின் சொத்துவரி பெயர்மாற்றம் செய்வது சம்பந்தமாக 12.12.2016 நாளிட்ட நகராட்சி ஆணையரின் அறிவிப்பு மூலமாக வரிவிதிப்பு எண்கள் 10298 மற்றும் 10299 உள்ள சொத்திற்கு பெயர் மாற்றம் செய்ய, பாதாளச் சாக்கடை வைப்புத் தொகை செலுத்திய நகலுடன் 7 தினங்களுக்குள் பெயர்மாற்றம் விண்ணப்பம் தாக்கல் செய்யும் பட்சத்தில் பரிசீலிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இக்கோப்பு முடிவு செய்யப்படும் என முறையீட்டு மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையே 03.04.2017 நாளிட்ட அறிக்கையிலும் நகராட்சி ஆணையர் உறுதி செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரர் திரு C.கருப்பசாமி, வருவாய் உதவியாளரிடம் 05.05.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 19.08.2016 அன்று முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மனு தனது கைக்கு வந்தவுடன், முறையீட்டு மனுதாரரின் வீட்டிற்குச் சென்றதாகவும், அப்பொழுது முறையீட்டு மனுதாரரின் சகோதர, சகோதரியிடம் பாதாளச் சாக்கடை இணைப்பிற்காக கட்டிய இரசீதுகளை இணைக்கவில்லை என்றும், அந்தத் தொகையினைச் செலுத்தி இரசீதினை வழங்கினால் பெயர் மாற்றம் செய்து தருவதாகத் தெரிவித்ததாகவும் அதன்பின் இரண்டுமுறை சென்றதாகவும் விசாரணையின்போது தெரிவித்தார். முறையீட்டு மனுதாரருடன் உடன் பணியாற்றிய காரணத்தினால் அவரது வீட்டிற்குச் சென்றதாகவும் எதிர்மனுதாரர் திரு C. கருப்பசாமி குறிப்பிட்டார். 12.12.2016 நாளிட்ட நகராட்சியின் அறிவிப்பிற்கு முறையீட்டு மனுதாரரிடமிருந்து எந்தவிவரமும் வரவில்லையென்றும், பாதாளச் சாக்கடை இணைப்புத் தொகையினைச் செலுத்தாத நிலையில், பெயர் மாற்றக் கோப்பு நிலுவையிலேயே உள்ளதாக நகராட்சி ஆணையரும் 05.05.2017 அன்று விசாரணையின்போது குறிப்பிட்டார்.

4. முறையீட்டு மனுதாரர், 04.05.2017 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருகை தரவில்லை. மக்கா "புனித பயணம்" மேற்கொண்டதால் வேறொரு நாளுக்கு விசாரணையை ஒத்திவைக்கும்படி கோரியிருந்தார். எனவே, 19.06.2017 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அன்றைய நாளிலும் விசாரணைக்கு வரவில்லை. எனினும், 19.06.2017 மற்றும் 03.07.2017 நாளிட்ட கடிதங்களில் சில கூடுதல் விவரங்களைக் குறிப்பிட்டுள்ளார். எதிர்மனுதாரர் திரு C. கருப்பசாமி தனது மனுவில் தெரிவித்துள்ள முகவரிக்கு ஒருமுறைகூட நேரில் விசாரணைக்கு வரவில்லையென்றும், மூன்று தடவை வீட்டிற்கு வந்தேன் என பொய்யான தகவலை திரு C. கருப்பசாமி நடுவர் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ளார் எனத் தனது 19.06.2017 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும், தனது சகோதரரும், சகோதரியும் எதிர்மனுதாரர் திரு C.கருப்பசாமி கேட்ட லஞ்சபணம் ரூ. 5,000/—தரவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவர்களது நான்கு மனுக்கள் மீதும் நடவடிக்கை எடுக்காமல் கிடப்பில்

போட்டுள்ளார் என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். தனக்கு வழங்கப்பட்டதாக நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ள 12.12.2016 நாளிட்ட அறிவிப்பு எண்.T.R.168/2016/A2 திட்டமிடப்பட்ட / ஜோடிக்கப்பட்ட முற்றிலும் உண்மைக்கு புறம்பான ஆதாரமற்ற ஆவணங்கள் ஏதுமில்லாத விளக்கத்தினை நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் 03.07.2017 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

5. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர் திருM. முஹம்மது ஆரிஃப் ஓய்வுபெற்ற நகராட்சிப் பணியாளர் எனத் தெரியவருகிறது. முறையீட்டு மனுதாரருக்கு அலுவலக நடைமுறைகள் அனைத்தும் தெரிந்திருக்கும். தனிநபர் ஒருவர் தனக்கு அல்லது குடும்ப நபர்களுக்கு சம்பந்தப்பட்ட கோரிக்கை குறித்து உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் வருவாய்த் துறை போன்ற அரசு அலுவலகங்களை அணுகும்போது, தான் செலுத்தவேண்டிய நிலுவைத்தொகைகளைக் குறிப்பிட்டு அத்தொகை செலுத்தியதை உறுதி செய்த பின்பே விண்ணப்பதாரரின் கோரிக்கைகளை பரிசீலிக்கும் நடைமுறை உள்ளது. இந்நடைமுறை ஒரு மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மேலும், பாதாளச் சாக்கடை By law விதிகளின்படி, சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைத் தொகையுடன் பாதாளச் சாக்கடை வைப்புத் தொகையினையும் செலுத்திடவேண்டும் என்ற விதி உள்ளதை எதிர்மனுதாரர் தனது 03.04.2017 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும், 12.12.2016 நாளிட்ட விருதுநகர் நகராட்சியின் அறிவிப்பு எண்.TR 168/2016/A2 தனக்கு வழங்கப்பட்டதாகக் கூறுவது திட்டமிடப்பட்ட / ஜோடிக்கப்பட்ட முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என மனுதாரர் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. மேற்குறிப்பிட்ட அறிவிப்பு முறையீட்டு மனுதாரரின் விருதுநகர் 17/7 அல்லி தெரு முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டது. 13.03.2017 நாளிட்ட தனது முறையீட்டு மனுவில் 2016–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தான் இல்லாதபோது தனது வீட்டிற்கு வருகை தந்து தனது சகோதர, சகோதரியிடம் அவர்களுக்கு பெயர்மாற்றம் செய்யவேண்டுமெனில் ரூ.2,000/– வழங்கவேண்டும் என எதிர்மனுதாரர் கூறிச்சென்றுள்ளதாக முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆனால், 03.07.2017 நாளிட்ட கடிதத்தில், எதிர்மனுதாரர் தனது பர்மா காலனி வீட்டிற்கு ஒருமுறைகூட நேரில் வந்து மனுவின் மீது யாதொரு தகவலும் தெரிவிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், திரு C.கருப்பசாமிக்கு தனது சகோதரரும் சகோதரியும் அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/– தரவில்லை என்ற காரணத்திற்காக தங்களது நான்கு மனுக்கள் மீதும் நடவடிக்கை எடுக்காமல் கிடப்பில் போடப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். முதலில் தான் வீட்டில் இல்லாதபோது வீட்டிற்கு வந்து ரூ.2,000/– கேட்டார் என்று குறிப்பிட்ட மனுதாரர், தன் வீட்டிற்கு ஒருமுறைகூட எதிர்மனுதாரர் வரவில்லை லஞ்சப்பணம் ரூ.5,000/– தர மறுத்ததால் தங்களது மனு பரிசீலிக்கப்படவில்லை எனவும் முன்னுக்குப்பின் முரணான தகவலினை அளித்துள்ளார்.

6. இந்நிலையில் எதிர்மனுதாரரான வருவாய் உதவியாளர் திரு C.கருப்பசாமி, முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மனு சம்பந்தமாக அவரது வீட்டிற்கு மூன்றுமுறை சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். எதிர்மனுதாரர் தனது தனிப்பட்ட காரணமாக உடன்பணியாற்றிய முறையீட்டு மனுதாரரின் வீட்டிற்கு சென்றிருந்தால் தவறில்லை. ஆனால், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை நகராட்சியில் நிலுவையில் உள்ளபொழுது, அவரது வீட்டிற்குச் சென்று அது குறித்து மனுதாரரின் சகோதர சகோதரியிடம் பேசியது ஒரு உள்நோக்கத்தைக் கற்பிக்கிறது. அலுவலக கோப்பு சம்பந்தமாக கூடுதல் தகவல்களைக் கோருவது கடிதப்போக்குவரத்து மூலமாகவே மேற்கொள்ளப்படவேண்டும். அதைத்தவிர்த்து தனது நண்பர், தன்னுடன் உடன் பணியாற்றியவர் என்ற நிலையில் ஒருவரது வீட்டிற்குச் சென்று அவரது கோரிக்கை குறித்து விவாதிப்பதை நகராட்சி

அலுவலர்கள் தவிர்க்கவேண்டும். இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைமனு சம்பந்தமாக அவரது வீட்டிற்கு எதிர்மனுதாரர் சென்றதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. முறையீட்டு மனுதாரரின் சகோதர சகோதரியிடம் எதிர்மனுதாரர் கையூட்டு கோரினார் என்பதை உரிய ஆதாரங்களுடன் சமர்ப்பிக்க முறையீட்டு மனுதாரர் தவறியுள்ளார். மேலும், முன்னுக்குப்பின் முரணான கடிதங்களை அனுப்பி இம்முறைமன்ற நடுவத்தின் காலநேரத்தை வீணாக்கிய முறையீட்டு மனுதாரரையும் இம்முறைமன்ற நடுவம் கண்டிக்கிறது. மேலும், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து நடைமுறையில் உள்ள விதிகளின்படி உடன் நடவடிக்கை மேற்கொண்டு அவரது கோரிக்கை மனுவிற்குத் தக்க தீர்வு வழங்கவும் விருதுநகர் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2017–** ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 29–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திரு எம். முகமது ஆரிஃப்,**
   **48/3, பர்மா காலனி,**
   **2–வது தெரு–தெற்கு,**
   **விருதுநகர்.**

2. **திரு சி. கருப்பசாமி,**
   **வருவாய் உதவியாளர்,**
   **விருதுநகர் நகராட்சி,**
   **விருதுநகர்.**

3. **நகராட்சி ஆணையர்,**
   **விருதுநகர் நகராட்சி,**
   **விருதுநகர்.**

**நகல் :** முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
**இ.கோ. / உதிரிகள்**